FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348066

1. District : Krishnagiri மாவட்டம் | PS: VSI AC காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 09/AC/2025 மு.த.அ. எண் | Date: 19.06.2025 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : 19.06.2025 நாள் வரை prior to 18.00 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : 19.06.2025 at 22.30hrs நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Through Sources
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Regional Transport Office Krishnagiri About 3 kms North east
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Ravi குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : S. Sathasivam தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 52/2025 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : Indian நாட்டினம் | (e) Passport No. : - வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspector of Police தொழில் | (g) Address : O/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption Krishnagiri District முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. P. Prabhakar, age 56, S/o Paramasivan[late], RTO Hosur, IC at Krishnagiri, O/o the Regional Transport, Office, Krishnagiri District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : –
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/06/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

SUO-MOTO

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20-06-2025 at 07.00 hrs

Name: பெயர் S. Ravi
Rank: நிலை Inspector of Police No. எண் .....
VSAC
Krishnagiri

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2025 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி.

19.06.2025 ஆம் தேதி மாலை 15.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்துவரும் திரு.P.பிரபாகர் அவர்கள் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு பொறுப்புவகித்து வருவதாகவும், அவர் இன்று 19.06.2025 ஆம் தேதி மாலை கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியினை மேற்கொள்ள வருவதாகவும், அப்போது அவர் ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், மினி பஸ் பர்மீட் வாங்கும் நபர்கள் ஆகியோர்களிடம் இடைதரகர்கள் மூலமும் கையூட்டு பணம் பெற்றும், அந்த பணத்தை அவர் பயன்படுத்தும் TN 30 G 3333 என்ற பதிவு எண் கொண்ட சில்வர் நிற Mahindra Bolero என்ற அரசு வாகனத்தில் எடுத்துக்கொண்டு, கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து ஒசூருக்கு மாலை சுமார் 06.00 மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு செல்லயிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு இன்று 19.06.2025 ஆம் தேதி மாலை சுமார் 15.15 அரசு சாட்சிகளுக்கு என்னால் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் அரசு சாட்சிகள் திரு.R.வேடியப்பன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், உதவியாளர் "A-3" இருக்கை, வட்டாட்சியர் அலுவலகம், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.S.நவின்குமார், வருவாய் ஆய்வாளர், சிங்காரப்பேட்டை உள்வட்டம், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் மாலை சுமார் 17.15 மணியளவில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து என்னிடம் அறிக்கை செய்துகொண்டனர். அவர்களிடம் திடீர் தணிக்கை மேற்கொள்ளும் விவரத்தினை தெரிவித்து காவலர் குழுவினருடன் அரசுக்கு சொந்தமான TN 22 G 7777 என்ற வாகனத்தில் புறப்பட்டு, மாலை சுமார் 17.50 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பின்புறம் அமைந்துள்ள கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகே வரப்பெற்றது. பின்னர், மேற்படி வட்டார போக்குவாத்து அலுவகத்திற்கு அருகே

அமைந்துள்ள சாலையின் இரு பக்கங்களிலும், நான், அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினர் நின்று கொண்டு கண்காணித்துக்கொண்டிருந்தோம். அப்போது மாலை சுமார் 18.05 மணிக்கு கிருஷ்ணகிரி வட்டாரபோக்குவரத்து அலுவலக வளாகத்தில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆயுதப்படைக்கு செல்லும் சாலையில் கிருஷ்ணகிரியை நோக்கி சென்ற TN 30 G 3333 என்ற பதிவு எண் கொண்ட சில்வர் நிற Mahindra Bolero என்ற வாகனத்தை காவலர் குழுவினர் உதவியுடன் கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்பிற்கும், தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர்கள் சங்க கட்டிடத்திற்கும் இடையில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆயுதப்படைக்கு செல்லும் பிரிவுசாலை அருகே மாலை சுமார் 18.10 மணிக்கு இடைமறித்து என்னால் நிறுத்தப்பட்டது. மேற்படி வாகனத்தில் ஓட்டுனர் இருக்கையில் ஒரு நபரும், இடது முன்புற இருக்கையில் ஒரு நபரும் அமர்ந்திருந்தார்கள். அதில் வாகனத்தின் இடது முன்புற இருக்கையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.P.பிரபாகர் என்றும், தான் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக கடந்த 19.12.2024 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், மேலும், கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக கடந்த 27.01.2025 ஆம் தேதி முதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இன்று 19.06.2025 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு தான் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து அலுவலக கோப்புகளை பார்வையிட்டதாகவும் தெரிவித்தார். பின்னர், நானும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர்கள் குழுவினரும் அவரவர் தம் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பிரபாகர் அவர்களிடம் திடீர் ஆய்வுக்கு வந்த விபரத்தை விளக்கமாக எடுத்துச்சொல்லி நானும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினர் ஒவ்வொருவரும் நாங்கள் வைத்திருந்த மணி பர்சை எடுத்துக்காட்டி சொந்தப் பணம் எவ்வளவு கொண்டு வந்துள்ளார்கள் என்ற விபரத்தை அவரிடம் தெரிவித்தோம். மேலும், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1,010/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்க்காக வைத்திருப்பதாக என்னிடம் தெரிவித்தார். அவரின்

விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரை கீழே இறக்கிவிட்டு, அவரைப்பற்றி நான் விசாரிக்க, அதற்கு அவர் தனது பெயர் C.கணபதி என்றும், தான் TEXCO என்ற தனியார் நிறுவனம் மூலம் கடந்த 8 வருடங்களாக ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு ஓட்டுனராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1,100/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்க்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே என்னால் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அரசு சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி அரசு வாகனமானது என்னால் சோதனை செய்யப்பட்டது. மேற்படி வாகனத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் மற்றும் ஓட்டுனர் அமர்ந்திருந்த இருக்கைகள் மற்றும் வாகனத்தின் முன்புறத்தில் அமைந்துள்ள டேஸ்போர்டு ஆகியன சோதனை செய்தபோது, சந்தேகத்திற்கு இடமான எந்தவிதமான பொருட்களோ, ஆவணங்களோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி வாகனத்தின் நடுவில் மூன்று நபர்கள் அமரும் இருக்கையினை சோதனை செய்தபோது, மேற்படி இருக்கையின் மேல் ARROW USA-1851 என்று முன்பக்கம் அச்சிடப்பட்ட கருப்பு நிற கணினி பை ஒன்று இருந்தது. அந்த பையினை அரசு சாட்சிகளின் உதவியுடன் சோதனை செய்ததில், அந்த பையின் முதன்மை அறையில் 500 ரூபாய் நோட்டுகள் கட்டு கட்டாக இருந்தன. அரசு சாட்சிகளின் உதவியுடன் அந்த பணத்தை எண்ணிப்பார்க்கையில், அதில் 500 ரூபாய் தாள்கள் 492 எண்ணிக்கை கொண்ட 5 பணக்கட்டுக்கள் இருந்தன. அதிலிருந்த மொத்த தொகை ரூ.2,46,000 ஆகும். மேற்படி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இடமானது பிரதான சாலை என்பதாலும், செயல்முறை நடவடிக்கைகளை தொடாமுடியாத நிலை இருந்ததாலும், மேல் விசாரணைக்காக அந்த பணத்தையும், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் மற்றும் அவரது ஓட்டுனரையும் வாகனத்துடன் அழைத்துக்கொண்டு மாலை சுமார் 18.30 மணிக்கு புறப்பட்டு மாலை சுமார் 18.35 மணிக்கு கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு என்னால் அழைத்துவரப்பட்டது. பின்னர் நானும், அரசு சாட்சிகள், காவலர் குழுவினர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் ஆகியோருடன் மேற்படி வட்டார

போக்குவரத்து அலுவலகத்திற்குள் நுழைந்தபோது, அந்த அலுவலகத்தின் தரை தளத்தின் இடதுபுறத்தில் ஒரு நபர் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்தார். அவரிடம் என்னையும், அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கை மேற்கொண்ட விவரம் தெரிவிக்கப்பட்டு, அவரைப்பற்றி விசாரித்தபோது, அவர் தனது பெயர் M.வெங்கடேசன் என்றும், தான் கிருஷ்ணகிரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் அவர்களை மேற்படி அலுவலகத்தில் இருந்த அவரது அலுவலக அறையில் அமரவைக்கப்பட்டார். பின்னர் மேற்படி அலுவலக கண்காணிப்பாளரிடம் அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களை ஆஜர் செய்யுமாறு நான் கூறியதன்பேரில், அவர் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த 1) திரு.கோபிநாத், கணக்கர், 2) திரு.சிதம்பரம்பிள்ளை, இளநிலை உதவியாளர், 3) திரு.ரஞ்சித்குமார், இளநிலை உதவியாளர் மற்றும் 4) திரு.நேருஜீ, உதவியாளர் ஆகியோரை ஆஜர் செய்து என்னிடம் அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் நான் அவர்களிடம் அவரவர்களின் பணிகளை செய்யுமாறு கூறி அனுப்பிவைத்தேன். பிறகு நான் வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் அமர்ந்திருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் அவர்களிடம் மேற்படி பணத்தை பற்றி கேட்க, அதற்கு அவர் மேற்படி கருப்புநிற கணினி பையானது தன்னுடையதுதான் என்றும், ஆனால் அதில் பணம் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும், அந்த பணம் தன்னுடையது இல்லை என்றும் என்னிடம் தெரிவித்தார். பிறகு மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் திரு.கணபதி அவர்களிடம் மேற்படி பணத்தை பற்றி கேட்க, அவரும் மேற்படி பணம் வாகனத்தில் இருந்த பையில் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.P.பிரபாகர் மற்றும் அவரது ஓட்டுனர் திரு.கணபதி ஆகியோர் கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், முன்னுக்கு பின் முரணான பதில் கூறியதாலும், இப்பணம் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் அவரது அரசு பணியினை மேற்கொள்ள கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் உள்ளதாலும், மேற்படி பணத்தை அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார்செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 19.06.2025 ஆம் தேதியன்று மாலை 18.35 மணி முதல் 19.06.2025 ஆம் தேதி இரவு 22.00

மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை வட்டார போக்குவரத்து ஆலுவலர் திரு. P.பிரபாகர் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு பொது ஊழியரான வட்டார போக்குவரத்து ஆலுவலர் திரு. P.பிரபாகர் என்பவர் ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், மினி பஸ் பர்மீட் வாங்கும் நபர்கள் ஆகியோர்களிடம் இடைதரகர்கள் மூலமும் கையூட்டு பணம் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக இன்று 19.06.2025-ம் தேதி இரவு 22.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Act 2018 -ன்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை மாவட்ட முதன்மை நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

19/06/2025

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.